ஆட்சியாளரின் அடாத செயலுக்குக் கண்டனம்

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—2—50) வெளியூர் (1—3—50) [இதழ் 180

சேலம் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டிக்க முற்போக்குச் சக்திகள் திரண்டெழுந்தன

குமுறும் நெஞ்சங்கள் பல்லாயிரக்கணக்கில் கூடிய காட்சி!

—(0)—

செங்கொடிகள் பல பறக்க சென்னையில் சர்வகட்சிக் கூட்டம்

"சேலம் சிறைச் சம்பவம் மிகக் கொடுமையானது. அன்று காங்கிரஸ்காரர்கள் சிறையிலிருந்தபோது எவ்வளவோ அட்டூழியங்கள் செய்தனர். அப்படியிருந்தும் அன்றிருந்த ஆங்கில அட்சி இத்தகைய கொடுமை புரிந்ததில்லை.

—தோழர் சச்சிதானந்தம்

சேலத்தில் நடந்ததுபோன்ற கொடுமை சீனாவில் சியாங் ஆட்சியில் தான் நடந்தது. அந்தச் சியாங்கின் நிலை இப்பொழுது என்ன?

—தோழர் வரதன்

"மாதவமேனன் அறிக்கையில் இந்தப் படுகொலையை நிகழ்ச்சி (Incident) என்றுகுறிப்பிட்டுள்ளார். 22 பேரைச் சுட்டுக் கொன்றது ஒரு நிகழ்ச்சியாம. ஆனால் அவர்கள் (இறந்தவர்கள) நடத்தியதாகச் சொல்லபடும் கலவரமாம் (Riot) இந்த ஆட்சியில் மக்கள் எப்படி வாழ முடியும்? வீட்டில் இருந்தால் 8 அவுன்ஸ் ரேஷன்; சிறைக்குப் போனால் சாவு"

—தோழர் கே. ஜி. சிவசாமி

"இந்த மிருகத்தனத்தை இந்தக் கூட்டம் மட்டுமல்ல, உலகமே கண்டிக்கிறது. பிரான்ஸிலே இபபடிப்பட்ட நிலை ஏற்பட்டபோததான் பாட்லி சிறை உடைக்கப்பட்டது; ஹிட்லர் ஆட்சியில் சிறைகள் சிதைந்தன, அங்கெல்லாம்கூட இந்த அக்ரமச்செயல் எல்லை மீறி நடந்ததாகத் தெரியவல்லை."

—தோழர் கணேசன்

"வரவர இந்த ஆட்சி அநாகரிகமான முறையில் செல்லுகிறது. முன்பு வெள்ளைக்காரன என்னென்ன சாதனங்களைக்கொண்டு இந்த நாட்டினரை அடக்கினானே, அதே சாதனங்களைக்கொண்டு இந்த அரசாங்கம் நம்மை ஆளததொடஙகி விட்டது."

—சாமி. சிதம்பரனார்

"நான் சுயமரியாதைக்காரன், பகுத்தறிவுவாதி என்ற முறையிலே இந்த சர்க்காரின் போக்கை நான் ஒருபோதும் ஒத்துக்கொள்ளமுடியாது. இந்த சர்க்கார் ஜன சர்க்காரா, அல்லது மனிதர்களை வேட்டையாடும் சர்ககாரா என்பது எனக்குப்புரியவில்லை.

—தோழர் அ. பொன்னம்பலனார்

ஆட்சியாளரின் இச்செயல் அடாதசெயல்; சேலத்தில் 22 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதானது ஜனநாயகததையே கொலை செய்ததாகும்

—தோழர் ஜீவரத்தினம்

இன்று சுட்டு வீழ்த்தப்படும் பிணங்கள் வருங்கால சமதர்மக் கோட்டையின் படிக்கட்டுகளாகும். குமுறும் உள்ளங்கள் அத்தனையும் வெடிக்க இருக்கும் எரிமலைகள்

—இரா நெடுஞ்செழியன்

இந்த ஆட்சியில் இன்னும் என்னென்ன நடக்குமோ!

—தோழர் நாராயணன்

சென்னை, பிப். 27—

சேலம் சிறையில் நடைபெற்றத் துப்பாக்கித் துரைசதனத்தைக் கண்டிக்கும் முறையில, நேற்று மாலை 6 மணிக்கு சென்னை நேப்பியர் பார்க் அருகில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆளுங் கட்சி நீங்கிய மாகாணத்திலுள்ள எலல முற்போக்குக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சுமார் 10,000-க்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர்.

கூட்டத்தில் ஏராளமான தொழிலாளரும், இளைஞர்களும், மாணவர்களும கலந்து கொண்டனர் கூட்டம் நடந்த மேடைகளருகில் எல்லாக் கட்சிக் கொடிகளும் வட்டமாக நாட்டப்பட்டு அழகுற பறந்துகொண்டிருந்தன.

தோழர்கள் எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை, கே ஜி சிவசாமி, வரதன், இரா. நெடுஞ்செழியன், சாமி. சிதம்பரனார், என். ஜீவரத்தினம், சச்சிதானந்தம், அ. பொன்னம்பலனார், கணேசன், நாராயணன் ஆகியோர் பல வேறு கட்சிகளின் சார்பில் பங்குகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்கு ஹிந்த்மஸ்தூர் சபா சார்பில் கலந்துகொண்ட தோழர் எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

சச்சிதானந்தம்

தோழர் சச்சிதானந்தம், சேலம சிறைசசாலை சம்பவம், மிகவும கொடூரச் செயலெனறும், காங்கிரஸ்காரர்கள சிறையிலிருந்தபொழுது அவர்கள எவ்வளவோ அட்டூழியங்கள் செய்தார்கள என்றும், ஆனால் அவர்களை அடபொழுதிருந்த ஆங்கில ஆட்சி எவவிதக் கடுமையான தண்டனையும் தரவில்லையென்றும், இன்னும் ஆட்சியாளரின் போக்கைக கண்டித்துப் பேசினார்.

வரதன்

சோஷலிஸ்ட கட்சியின் சார்பில பேசிய தோழர் வரதன குறிப்பிட்டதாவது: சேலத்தில நடந்த கொடூரச் செயல அவர்கள கிளர்ச்சி செய்தார்கள என்பதறகாகவல்ல; எதிர் கட்சிககாரர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்பதற்காகத்தான நடந்திருக்கிறது. பொதுமக்களாகிய நாம், ஆட்சியாளருக்கு ஓர் எச்சரிக்கை விடுகக வேண்டும். ஆளவந்தார்கள் தங்கள் இஷ்டப்படி யாரையும் சுட்டு

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

முப்பது தொழிலாளர்களுக்கு வேலை இல்லை!

டிராம்வே வேலைநிறுத்தத்தின் விளைவு!

போனஸ் கோரி உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திலீடுபட்ட டிராம்வேத் தொழிலாளர்களில், 30 பேர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லிவிட்டனர் டிராம்வே அதிகாரிகள்.

அண்மையில் நடைபெற்ற டிராம்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம், பலர் கைது செய்யப்பட்டபின், கடந்த 24-ம் தேதியோடு ஒருவாறு முடிவடைந்தது. மறுநாள தொழிலாளர்கள் வேலைக்கு வந்தனர். ஆனால் அவர்களில் 30 பேரை வேலையில் சேர்த்துக்கொள்ள டிராம்வே நிர்வாகம் சம்மதிககவில்லை.

இலங்கை விமானங்கள்

சிங்கப்பூர், பிப. 27—

ஏர்சிலோன் விமானங்களெல்லாம் இலங்கை விமானிகளாலேயே ஓட்டப்படுமபடி செய்வது இலங்கை சர்க்கார் கொள்கை என்று, இலங்கை சிவில் எவியேஷன டைரக்டர் இங்கு கூறினார்.

இலங்கைக்கும், மலயாவுக்கும விமான உடன்படிக்கை யொன்று கையெழுத்தாகவிருககிறது.

இங்கிலீஷ் சானலைக் கடக்கும் போட்டி

லண்டன், பிப். 27—

இங்கிலீஷ் சானலைக்கடக்கும் போட்டியை இந்தா, மாகில்தான நீச்சுநிபுணர்களும கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்படுகிறது. 16 தேசங்களின் நிபுணர்கள் இதில் கலந்து கொள்வர் என்று தெரிகிறது.

பிராங்கோவுக்கு எதிராக பலம் திரட்ட முயற்சி

பாரிஸ், பிப் 27—

பிராங்கோவுக்குப் எதிராக எல்லாக் கட்சிகளையும் கொண்ட ஐக்ய முன்னணி ஒன்று ஸ்பெயினில் இருக்கிறது என்பதை அமெரிக்காவுக்கு தெரியப்படுத்த பாஸ்க் செகரட்டரி கட்சி தலைவரான ஜோஸ் அகொயரே என்பவர் முயற்சித்தார். ஸ்பானிஷ் சிம்மாதனத்திற்கு உரிமை கோரும் டான் ஜுவான் இவருடன் எவ்விதசமரசப் பேச்சுநடத்தவும தயாராக இல்லை என்பதைடான் ஜுவான் காரியதரிசி அறிவித்திருக்கிறார்.

ஏடுகளின் கருத்தறியா முன் செய்யப்பட்ட யதேச்சாதிகார மசோதா!

பட்டேலின் மசோதா பற்றி பத்திரிகாசிரியர் கழகக் கருத்து

பாட்னா, பிப். 26—

பீஹார் பத்திரிகையாளர் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று மாலை நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இந்தியப் பாராளும் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருககும் புதிய பாதுகாப்பு மசோதா முன்கூட்டியே இந்நாட்டு பத்திரிகையாளரின் கருததை அறிந்து செய்யப்படவில்லை. இம் மசோதா பாராளு மன்றத்துக்குக கொண்டுவரப்படுவதற்கு முன்பே, பத்திரிகையாளர்கள் இது பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வர அவகாசம் தரப்பட்டிருககவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் அளிக்காமல, இத்தகைய மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது கண்டு இப் பததிரிகையாளர் கழகச் செயற்குழு வருந்துகிறது"

ஸ்பானிஷ் சித்திரங்கள் தீ விபத்திலிருந்து தப்பின

கெயரோ, பிப. 27—

இஸ்மைல் பாஷாவின் அரண்மனையில தீ பற்றி எரிந்துகொண்டபோது, அதிலிருந்த 20 லக்ஷம் மதிப்புள்ள ஸ்பானிஷ் சித்திரப்படங்கள் மிகப பிரயாசையின் மீது அகற்றப்பட்டு காப்பாற்றப்பட்டன. தீயணைக்கும் படையினரில் நால்வர் புகையினால் மயக்கமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

—ரூனோப்

கேள்வி கூட கேட்கக்கூடாதாம!

—(0)—

பாதுகாப்பு மசோதாவுக்கு பாதுகாப்பு தேடப்படும பக்குவம்!

புதுடில்லி, பிப 25—

அவசரமும் அவசியமும் ஆன சர்க்கார் மசோதாக்களை கவனிப்பதற்கு வசதியாக இருப்பதற்காக கேள்விகளுக்குப பதிலளிப்பதை இன்று பார்லிமெண்டரத்து செய்து விட்டது.

கேள்விகளுக்குப் பதில் அளிப்பதை நிறுத்தி வைக்கும்படி தமக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாவும், அதற்குச் சபையின சம்மதத்தைக் கோருவதாகவும் சபைத்தலைவர் தோழர் மவ்லங்கர் சபையில் அறிவித்தார்.

பட்டேலின் பாதுகாப்பு மசோதா பார்லிமெண்ட நிகழ்ச்சிக் குறிப்பில இருந்த போதுதான்சர்க்காரிடமிருந்து சபைத் தலைவர்க்கு இந்த வேண்டுகோள் வந்திருக்கிறது.

ஐஸ்லாந்து நாணய மதிப்பு குறைக்கப்பட்டது

ரேகஜாவிக், பிப 27—

ஐஸ்லாந்தின் நாணயமான க்ரோனாவின் மதிப்பைக் குறைப்பதென்று ஐஸ்லாந்து சர்க்கார் முடிவு செய்து விட்டது. இனி ஒரு டாலருக்கு 16.28 க்ரோனாதானாம்.

மஞ்சூரியாவில் மகத்தான மாறுதல்

கொள்கைகள் மாறுகின்றன உற்பத்திப் பெருகுகிறது

லண்டன், பிப். 27—

மஞ்சூரியா கம்யூனிஸ்டுகளின் தளமாகவும், சப்ளை ஸ்தலமாகவும் செய்யப்பட்டு வருகிறதென்று இங்கு சய்தி கிடைத்திருக்கிறது. இந்த இடத்தை சோவியத் மயமாக்கும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகிறதாம். அங்குள்ள சீனர்களுக்கு ரஷ்யக் கொள்கைகளைப் புகட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றனவென்றும், உற்பத்திகள் பெருக்கப்பட்டு வருகின்றன வென்றும் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 28—2—50 செவ்வாய்க்கிழமை

கனவும் நனவும்! (1)

இத் திங்கள் 26-ம் நாள், தேசீய காங்கிரஸ் இளைஞர்கள் சார்பில், மாநாடு ஒன்று, தமிழ் நாடு இளைஞர்கள் முதல் மாநாடு என்ற பெயரோடு, கூட்டப்பட்டு, சில பல பேசப்பட்டு, கலைக்கப்பட்டிருக்கிறது தூத்துக்குடியில்.

இப்படிப்பட்ட இளைஞர் மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்பது, காங்கிரஸ் இளைஞர்களுக்கு இருந்ததோ என்னவோ தெரியவில்லை; ஆனால் இப்படிப்பட்ட மாநாட்டைக் கூட்டுவதில் தோழர் காமராஜருக்கு, அதிக அக்கரை இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. தோழர் காமராஜரின் கண்காணிப்பின் கீழ் மாநாடு நடைபெற்றிருக்கிறது என்றாலும், கள்ளங் கவடு அற்ற இளைஞர்கள் சிலர் மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். பங்கெடுத்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், தங்கள் உள்ளத்தைப் பட்டவர்த்தனமாகத் திறந்தும் வைத்திருக்கிறார்கள்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த இளைஞர் தோழர் குழந்தைவேலு, தமது தலைமைச் சொற்பொழிவில் கள்ளங் கவடு அற்ற இளைஞர் உள்ளத்தின் துடி துடிப்பை, ஓரளவுக்கு உள்ளவாறு எடுத்து உணர்த்தியுள்ளார்.

இளைஞர் உலகம் பொதுவாக எங்கிருந்தாலும் கள்ளம்-கவடு-சூது-வாது—வஞ்சகம்-சூழ்ச்சி-பொருமை-போச்சரிப்பு-அரசியல் வாணிபம் ஆகிய இவற்றின் சூழலிலே ஆழச் சிக்கிவிடாமல, ஓரளவுக்குவெள்ளை உள்ளம்படைத்தோர் உலாவும் உலகமாக இருப்பதுஇயல்பாகும். அப்படி வெள்ளை யுள்ளங்கொண்ட இளைஞர் உலகத்தான், சூது-சூழ்ச்சி-வஞ்சக—வாணடம் இவற்றில் கைதேர்ந்த அரசியல் சூதாட்டத் தலைவர்கள் தமக்குச் சார்பாக இருக்கும் படி செய்ய, வஞ்சக வலைகளை வித விதமாக வீசுவர். சிக்கிச் சீரழிவார் சிலர்! எடுப்பார் கைப் பாவையாக இருந்து ஏமாளிகளாவோர் பலர்! பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்தனைத் தெளிவு பெற்றுச் சீர்நிலை நாடுவார் சிலர்!

காங்கிரஸ் இளைஞர் உலகம் எதை எதையோ, எதிர்பார்த்து எதிர்பார்த்தவைகளிலெல்லாம் ஏமாற்ற மடைந்த காரணத்தால், சோர்வுற்று, இப்பொழுது கரைந்துகொண்டு வருகிறது அதன் கரைவு அதிகமாக அதிகமாக காங்கிரஸின்வலிவும், வளமும், வனப்பும் நாளுக்கு நாள் கரைந்து கொண்டே வருகிறது கட்டுப்பாடு குலைந்து கரைந்துவரும் காங்கிரஸைக் காப்பாற்றி வைக்கவேண்டிய பொறுப்பு, தன் ஆதிக்க அதிகாரம் கரையக் கூடாது என்று எண்ணும் தோழர் காமராஜரின் நீங்காக் கடமையாகிவிட்ட படியால், சிதறி ஓடும் காங்கிரஸ் இளைஞர்களை வலைவீசிப் பிடித்திழுத்து வைத்துச் சிலபல பேச வேண்டிய நெருக்கடி அவருக்கு ஏற்பட்டுவிட்டது. எனவேதான், இளைஞர்மாநாடு கூட்ட அவர் அவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டுள்ளார்!

இளைஞர் மாநாட்டின் தலைவர், காங்கிரஸின் எதிர்க்கட்சியினரைப் பற்றியும், மாறுபட்டக்கருத்தினரையும் பார்க்கும் போது, காமராஜர் காணுவது போன்ற "விசித்திர பார்வை" யால் சில பல இடங்களில் பார்த்தாலும், உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் கருத்துக்களைக் கள்ளமற்றத் தன்மையில் கொட்டியுள்ளார். காங்கிரஸ் தலைவர்கள் இயல்பாக மறைக்க வேண்டும் என்று எண்ணுகிற பல காட்சிகளை, உண்மை வாலிபத் துடிப்பின் காரணமாக நாட்டவர்க்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு உணர்த்தியுள்ளார் மாநாட்டின் தலைவர், தம் தலைமைச் சொற்பொழிவில்.

விடுதலைப் போர் வீரர்கள் அன்று கண்ட கனவையும், நாட்டிலே இன்று காணும் நனவையும் மாநாட்டின் தலைவர் சிந்திக்கிறார்! கனவும்-நனவும் அவர் உள்ளத்திரையிலே தெரிகின்றன! சொற்களால்கொட்டுகிறார். காமராஜர் முன்னிலையிலேயே!

"இந்த வீரர்கள் (விடுதலைப் போர் வீரர்கள்) கண்ட சுதந்தரக் கனவு எப்படிப்பட்டது?"

தலைவர் தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறார். அதற்கான விடையை அவரே கூறுகிறார்!

"தங்கள் தியாகத்தால் உருவாகும் சுதந்தர பாரதம் மிகச் சிறந்தவளமான நாடாக விளங்கு மென்றும், சுதந்தர இந்தியாவில் செல்வம் கொழிக்கும் என்றும் அவர்கள் கனவு கண்டவர்கள்"

என்று விடுதலை வேட்கை கொண்ட போராட்ட வீரர்கள், கண்ட கனவின் திறத்தைச் சொல்லி பூரிப்படைகின்றார்! அதே நொடியில் இன்றைய நிலையைப்பற்றி எண்ணுகிறார்.

"ஆனால்..." என்று சோர்வடைகிறார்;

"இன்றைய நிலை என்ன?" என்று சோகங்கலந்த குரலில் கேட்கிறார். கேட்பது எதிரே கூடியிருந்த மக்களிடத்திலிருந்து பதில் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அல்ல, தன் வாலிப உள்ளம் அறியும் உண்மை நிலையைத் தட்டிக் கேட்கிறார்.

உண்மை யுணர்ச்சி தூண்ட

சொற்கள் வெளியே கொட்டுகின்றன! எப்படி?

"பஞ்சமும் பட்டினியும் இன்று மக்களை வதக்குகிறது. ஆண்டு தோறும் பெருகிவரும் மக்கள் கூட்டத்திற்கு நிற்க நிழலில்லை. படித்துப்பட்டம் பெற்று எதிர்காலத்தை ஆசையோடு நோக்கிவரும் வாலிபனுக்கு வேலை யில்லை. பண்டு முதல்தொண்டு செய்து ஏழ்மை பின்சின்னமாய் வயிற்றைக் கழுவிவரும் தொழிலாளியின் குடிசையிலே வாழ்வின் ஒளியில்லை. எங்கும் அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது."

என்றபடி!

வீரர்கள் கனவு கண்டார்கள், அந்தக் கனவு நனவாகும் என்று எண்ணினர் இளைஞர்கள்; ஆனால் இன்றைய நனவு வேறாக இருக்கின்றது என்பதை. ஆளும் கட்சியைச் சேர்ந்த இளைஞர் தலைவர் கூறுகிறார்.

"எங்கும் செல்வம் கொழிக்கும்" என்பது கண்ட கனவு!

"எங்கும் அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது."

என்பது காணும் நனவு!

வீரர்கள் கனவு கண்ட போது கனவை நனவாக்கும் வாய்ப்பில்லை; ஆனால் இன்று வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது; ஏற்பட்டிருந்தும் கனவு நனவாகவில்லையே என்று சொல்ல முடியாமற் சொல்லி ஏங்குகிறார் மாநாட்டின் தலைவர். கனவு நனவாகவில்லை; கனவு கண்டது வேறு; நனவாகியிருப்பதுவேறு; என்று நிலைமையை யுணர்த்த முடிகிறது—ஏன் என்று சிந்தியுங்கள் என்று கேட்கமுடிகிறது மாநாட்டின் தலைவரால்!

வாய்ப்பு இருந்தும், வசதியிருந்தும், தலைவர் அவர்கள் விளக்குகிறபடி காந்தியார் காட்டிய வழியிருந்தும் கனவை நனவாக்க முடியவில்லை! ஏன்? கண்டறிய முடியவில்லையா? கண்டறிந்தாலும் கூற முடியாத நிலையா? எதற்காக அந்த இடத்தில் திகைக்கிறாரோ தலைவர் தெரியவில்லை!

கனவு வேறு-நனவு வேறு! காரணம் என்ன?

ஆளவந்தவர்களிடம் ஆற்றலில்லை; திட்டம் தீட்ட திறமையில்லை; தீட்டும் திட்டத்தை நிறைவேற்றி வைக்கத் தெம்பு இல்லை; இவற்றைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்!

அறிவுக் கதிர்!

ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்ப வர்தொகை!
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல்கொள் வோர்தொகை
கூற ஒன்று மோதுமாயின்
தோணி ஓட்டம் மேவுமோ?

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

உறவு மசோதாவா, அடிமை சாஸனமா?

அடக்குமுறைகளை எதிர்த்து கண்டனக்குரல் எழுப்புக!

அ. இ. தொ. ச. காங்கிரஸ் செயற்குழு தீர்மானங்கள்

பம்பாய், பிப். 26—

இன்று இங்கு கூடிய அகில இந்தியத்தொழிற் சங்கக் காங்கிரஸ் கூட்டத்தில், இந்திய பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தொழில் உறவு மசோதாவைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு அ. இ. தொழிற் சங்கத்தலைவர் தோழர் சக்கரை கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

பாராளும் மன்றத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய தொழில் உறவு மசோதா ஒரு 'அடிமை சாசனம்" என்றும், இந்த மசோதாவைக் கண்டித்து ஏப்ரல் 3-ம் தேதி நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்துமாறும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், மார்ச் 18-ம் தேதியை "அடக்குமுறை எதிர்ப்புத் தினம்" ஆகவும், ஏப்ரல் 24-ம் தேதிமுதல் மே 1-ம் தேதி வரை "அமைதி வாரம்" ஆகவும் கொண்டாட வேண்டும். என்றும், அ. இ. தொ சங்கச செயற்குழுவினர் தீர்மானித்தனர்.

நேரு சர்க்கார் மூலம் ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியம் நடைபெறுவதைக் கண்டிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் இந்தியாவில் புது அரசியல் அமைப்பு பிரிட்டிஷ் முதலாளித்வத்தோடு இந்தியா செய்துகொண்ட ஒரு ரகசிய ஒப்பந்தமெனவும், பாட்டாளி மக்களைச் சுரண்டி முதலாளிகளை வாழவைக்கும் அரசியல் என்று விளக்கும் தீர்மானங்களாகும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும், விவசாயத் தொழிலாளருக்கு 7 மணி நேர வேலையும், மாதம் 80 ரூ. சம்பளமும் அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தியும், கம்யூனிஸ்டுகட்சியின் மீதுள்ள தடைகளை நீக்கும்படியாகவும், உலக அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் பாடுபடும் தோழர் ஸ்டாலினை வாழ்த்தியும், சீனாவில் மக்களாட்சியை நிலவச் செய்த தோழர் மா-சே-துங்கிற்கு வாழ்தது கூறியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருத்தம்

25-2-50 மாலை மணியில், சென்னை மாவட்ட தி. மு. க துணைச் செயலாளர்கள் விட்ட செய்தியில், மாவட்டக் கழகம், அமைந்த தேதி 4-12-50 என்பதற்குப் பதிலாக 4-12-49, என்று திருத்திப் படித்துக்கொள்ளவும்.

மோட்டார்காரை பந்தாடிய யானை

லண்டன், பிப். 27—

கிழக்கு ஆப்பிரிக்காவில் காட்டு மிருகங்கள் எப்படி வாழ்க்கையை நடத்துகின்றன என்பதை சினிமாப்படமாகத் தயாரிக்கச் சென்ற ஒரு கோஷ்டியினர் ஒரு யானையிடம் மிகவும் அல்லல் பட்ட செய்தி இங்கு கிடைத்திருக்கிறது.

ஒரு யானைக் கூட்டத்திலிருந்து யானை ஒன்று இவர்கள் மோட்டார்காரைப் பார்த்துவிட்டது. தன் தந்தங்களை காருக்கடியில் கொடுத்து மோட்டாரைத் தூக்கிப் பந்தாட ஆரம்பித்துவிட்டது. கடைசியில் அதைக் கீழே போட்டு நொறுக்கியது. நல்லவேளையாக உயிர்ச்சேதம் எதுவும் இல்லை.

இக்கோஷ்டியினர் இரு காண்டாமிருகம் போட்ட சண்டையைப் படமெடுத்திருக்கின்றனர். —ரூலோர்.

டிட்டோ-ஸ்டாலின் உறவு?

மாஜியூகோமன்னர் தரும்தகவல்

லண்டன், பிப். 27—

ஸ்டாலினுடன் மார்ஷல்டிட்டோ குலாவ ஆரம்பித்துவிட்டதாகவும், இருவருக்குமிடையே சமரஸம் உருவாகிவருவதாகவும் தனக்கு ரகசிய தகவல் உள்நாட்டிலிருந்து கிடைப்பதாக யூகோஸ்லாவியாவின் முன்னாள் மன்னர் பீட்டர் கூறுகிறார்.

'ஏஜென்ஸி பிரான்ஸ் பிரஸ்ஸி' என்ற செய்தி ஸ்தாபனத்திடம் இத்தகவலை அவர்தெரிவிக்கையில், இந்தோசீனா கம்யூனிஸ்டுதலைவரான ஹோசிமின் சர்க்காரை டிட்டோ அங்கீகரித்ததை அடிப்படையாகக் கொண்டே இதைதான் சொல்வதாகவும், கிரெம்லினிடம் நல்லெண்ண உறுதி மொழி தெரிவிப்பதே இந்த அங்கீகாரத்தின் அர்த்தமாகும் என்றும் கூறினர்.

மதுவிலக்கு வெற்றிபெற வழி!

உணவுசத்தில் பற்றுக்குறையே குடிக்குக் காரணம்

லண்டன், பிப். 27—

குடிப் பழக்கத்திற்குக் காரணம், ஒருவனுடைய உணவில் போதிய சத்துக்கள்பற்றுக்குறைவாகஇருப்பதே காரணம என்றும், இவ்விஷயத்தில் மனிதனும், எலிகளும் ஒரே மாதிரிதான் நடந்துகொள்கின்றன என்றும் எலிகளை வைத்து ஆராய்ச்சி நடத்தியஅமெரிக்க நிபுணர் புரபஸர் எல். ஜே. பெர்ரி கூறுகிறார்.

எலிகளுக்குப்போதியஆகாரத்தை அளித்தால் அவை ஆல்கஹாலை லட்சியம் செய்வதில்லை என்பதை தான் கண்டறிந்தத தவர் கூறுகிறார்.

ஆகவே குடிப்பழக்கத்தை ஒழிக்க வழி அதிக உணவு ஒருவனுக்கு கிடைக்கும்படி செய்தலேயென்றும், நல்ல சத்துள்ள உணவுகள் கிடைக்கும்படிதான் என்றும், எந்த சத்து குறைவால் இந்தக் குடிஆசை ஏற்படுகிறதென்பதைக்கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கூறினர்.

ஆட்சியாளரின் அடாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிராண்டித்தனமாக சுட்டுக் கொன்றுவிட முடியாது. ஆட்சிபீடமேறியவர்கள் மக்களுடைய பிரதிநிதியே ஆவார்கள். மக்களுடைய உயிர்ப் பாதுகாப்பு அரசாங்கத்தின் கையில்தானிருக்கிறது. சிறையிலே கைதியாக இருப்பவர்களின் பொறுப்புணர்ச்சி அரசாங்கத்தின் கையில் இருக்க, அதைவிடுத்து காட்டுமிராண்டித்தனமாக, குரங்குகளைவிடக் கேவலமாக நடந்துகொண்ட ஏ அரசாங்கமே! நீ உன் இஷ்டத்திற்கு ஆட்சியை நடத்திக்கொண்டு செல்வாயேயானால், உன் நிலைமை என்னவாகுமென்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

சமீபத்தில் மந்திரி மாதவமேனனின் காரில் கற்கள் எறியப்பட்டதாகக் கேள்வியுற்றோம். அது எதைக்காட்டுகிறது? ஆட்சியாளரின் போக்கை எதிர்த்து நிற்கும் மக்கள் சக்தியல்லவா அது? மக்களின் மாபெரும் எதிர்ப்பு சக்தியைத்தான் காட்டுகிறது இந்தக் கூட்டமும். நாம் எவ்வளவு எடுத்துச்சொன்னாலும் எதற்கும், அரசாங்கம் மசியப்போவதாகத் தெரியவில்லை. நான் சோஷலிஸ்டுக்காரன், இருந்தாலும் கம்யூனிஸ்டுக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. சேலத்திலே நடந்த கொடுமைபோல சைனாவிலே சியாங் ஆட்சியில்தான் நடந்தது, அந்த சியாங்கின் நிலை இப்போது என்ன? அதேபோன்று ஸ்பெயின், ஜெர்மனி இடாலி. ஆகியவற்றின் கதி எவ்வாறுள்ளது? இப்பொழுது அரசியல் ஒரு நெருக்கடியான கட்டத்திலுள்ளது. ஆனால் அரசியல்வாதிகளுக்குச் சரித்திரம் தெரியாது. நான் அவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். ஒருவர் உள்ளத்திலுள்ள கருத்தை, கொள்கையை யாரும் அழிக்க முடியாது; மாறாக அது வளரவே செய்யும். ஏ அரசாங்கமே! உன்னுடைய அடக்குமுறையை அள்ளி அள்ளி வீசிக்கொண்டே செல்வாயேயானால், அவ்வடக்குமுறை கணைகளே உன்னையே வீழ்த்தும்! வீழ்த்தும்!! வீழ்த்தும்!!!'' என்று கூறி முடித்தார்.

கே. ஜி. சிவசாமி

பிரஜா உரிமைக் கழகச் சார்பில் கலந்துகொண்ட தோழர் கே. ஜி. சிவசாமி கூறியதாவது:—

சேலத்திலே நடந்த இந்தப் படுகொலையை அரசாங்கம் விசாரணை செய்வதாகக் கூறுகிறது. உண்மையிலேயே அரசாங்கத்திற்குத் தன் தவறு குறித்து பயம் ஏற்பட்டுத்தான் விசாரணை செய்ய ஏற்பாடு செய்துள்ளது. சேலம் படுகொலை மட்டுமல்ல; அகமதுநகரிலே கடலூரில் ஒரு தடவை, ஆஸ்டியில் ஒரு தடவை இப்படியாகப் பல தடவைகள் பல சிறைகளில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன. பல பொதுக் கூட்டங்களில் இதுபற்றி விசாரணை தேவை என்று கூறியும் மதிப்புதரப்படவில்லை. எல்லா நாட்டினுடைய நிலையும் நம்நாட்டில் ஏற்படவேண்டும். சேலம் போன்ற நிகழ்ச்சி வேறுநாட்டில் நடந்திருந்தால் அங்கு பகிரங்க விசாரணை நடத்தப்படும். ஆனால் இங்கு அப்படியல்ல. எனவேதான், சரியான விசாரணை தேவை என்கிறோம். படுகொலை செய்தது நியாயமாகவே யிருந்தாலும், அதற்கும் எல்லோருமறிய ஓர் விசாரணை தேவை, அதுதான் சட்டம். இந்தப் படுகொலை சம்பந்தமாக சமீபத்தில் மந்திரி மாதவமேனன் பத்திரிகைச் செய்தியொன்று கொடுத்துள்ளார். அதில் 'இந்தக் கைதிகள் குல்லாயணிய மறுத்தனர், விலங்கு போட்டுக் கொள்ளவில்லை. அதனால்தான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது'' என்று கூறியுள்ளார். அப்படியே அந்தக் கைதிகள் நடந்திருந்தாலும், அதற்கு அளிக்கப்படவேண்டிய தண்டனை என்ன? சுட்டு வீழ்த்துவதா? ஒரு கைதி டெபுடி சூப்பரண்ட் சட்டையைப் பிடித்து இழுத்தாராம். அதனால் சுடநேரிட்டதாம்! உண்மையிலேயே சட்டம் என்ன சொல்கிறதென்றால், 'உனக்கு அவர்களால் சாவு ஏற்படக்கூடிய நிலை வந்ததென்றால் சுடு' என்பதுதான். ஜெயில் வார்டர் ஒருவர் கலகம் வரும்போலிருக்கிறதென்றாராம். உடனே 12-வார்டர்கள், ஒவ்வொரு துப்பாக்கியிலும் 5 குண்டுகள் வீதம் போட்டு 20 பேரைச் சுட்டிருக்கின்றனர்.

மாதவமேனன் அறிக்கையில் இந்தப் படுகொலையை Incident (நிகழ்ச்சி) என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையாகவே இது ஒரு நிகழ்ச்சியா? 22 பேரைச் சுட்டுக்கொன்றது ஓர் நிகழ்ச்சியாம். ஆனால் அவர்கள் (இறந்தவர்கள்) நடத்தியதாகச் சொல்லப்படுவது "Riot" கலவரமாம். இந்த ஆட்சியில் மக்கள் எப்படி வாழமுடியும்? வீட்டிலிருந்தால் 8 அவுக்ஸ்ரேஷன், ஜெயிலுக்குப்போனால் சாவு!

இந்தப் படுகொலையை விசாரிக்க உத்தியோகப் பற்றில்லாதவர்களைக்கொண்ட ஓர் விசாரணைக்குழு அமைத்துள்ளதாக அரசாங்கம் கண்துடைப்பு வேலைசெய்கிறது. அந்தக் குழுவில் உள்ள மூன்றுபேரில் இரண்டுபேர்கள் சர்க்காரிலிருந்து பென்ஷன் வாங்குபவர்கள். இது யோக்கியமான ஆட்சிக்கு அழகல்ல. இருதரப்பிலும் வக்கீல்கள் வைத்து பகிரங்கமாக விசாரணை நடத்த வேண்டும்.

இன்று காலை பார்லிமெண்டில் சர்தார் பட்டேல் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்கியுள்ளார். இந்தச் சட்டம் மிக மிகக் கொடுமையானது. இதைக் கொண்டுவந்து சட்டமாக்க சர்தார் பட்டேல் இரண்டு இரவுகள் கண்விழித்துத் தயாரித்தாராம்!

இந்தச் சட்டத்தைக் கண்டு தம் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" இராமநாத கோயங்காவே பயப்பட்டுவிட்டார் என்றால், அது எப்படிப்பட்ட சட்டமாக இருக்கும்! 'அட்வைசரி போர்டு' இல்லாமலே இரண்டாண்டுவரை யாரையும் அடைத்து வைக்கலாமென்பதே இச்சட்டம். இதை ஆதரித்த சர்க்கார் வக்கீலே முன்புதான்எழுதியுள்ள புத்தகத்திலேயே இம்முறையைக் கண்டித்துள்ளார். விசாரணைக் குழுவிலுள்ள ஜில்துரை என்பவர் விசாரணை முதல் நாளே தம்கருத்தை-அதாவது தம் தீர்ப்பைக் கூறிவிட்டார். இந்தக்கைதிகள் இதுபோல பலவிடங்களில் கலகங்கள் விளைவித்துள்ளனர் என்று. அவருடைய இப்படிப்பட்ட 'பூசி மெழுகும்' வேலையைக் கண்டிக்க வேண்டுமென்பதுடன், அவர் தன் கருத்துக்களை வாபஸ் வாங்கவேண்டும். சுட்டவர்களனைவரையும் சஸ்பெண்ட் செய்வதோடு பகிரங்க விசாரணைக்கு பிரஜாவுரிமைக்கழகத்திலிருந்து 2 வக்கீல்களை அழைத்து வழக்கு நடத்தவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

கணேசன்

அடுத்தபடியாகத் தோழர் கணேசன் சென்னை மாகாணத் தொழிற்சங்க காங்கிரஸ் (M. P. T. U. C.) சார்பாகப் பேசினார். அவர்பேசுகையில் குறிப்பிட்டதாவது:- இந்த சேலம் படுகொலை சம்பந்தமாக முதல் நாள் பத்திரிகையில் சிறிய அளவில் ஏதோ கலகவரம் நடந்ததாகவும், அதனால் துப்பாக்கி பிரயோகிக்கப்பட்டதாகவும் செய்தி வந்தது. பிறகு மறு நாள்தான் 22 பேர் மாண்டதாகவும், 100 பேருக்கு மேல் காயம் என்றும் தெரிய வந்தது. இந்த கொடூரத்திற்கு ஆளான அத்தனை பேரும் தொழிலாளத் தோழர்களேயாவர். இதைப் போன்ற கொடூரச்செயல் சேலத்தில் மட்டும் நடக்கவில்லை. இந்தியா முழுதுமே நடந்து வருகிறது. சபர்மதி, கல்கத்தா இன்னும் பல சிறைகளில் நடந்துள்ளன. இந்த மிருகத்தனத்தை இந்தக் கூட்டம் மட்டுமல்ல, உலகமே கண்டிக்கிறது. பிரான்ஸிலே இந்த நிலை ஏற்பட்ட போதுதான் பாஸ்டில் சிறை உடைக்கப்பட்டது. ஹிட்லர் ஆட்சியிலும் சிறைகள் சிதைந்தன. அங்கெல்லாம் கூட இந்த அக்கிரமச் செயல் எல்லைமீறி நடந்ததாகத் தெரியவில்லை.

இந்த நாட்டில் உண்மையை எடுத்துக் கூற பத்திரிகைகள் கிடையாது. ஒரு சில உண்டென்றாலும், அவைகளுக்கு ஜாமீன், தடை, மற்ற அடக்கு முறைகள் வீசப்படுகின்றன. இந்த ஆட்சியின் போக்கு இப்படியேப் போய்க்கொண்டிருக்குமேயானால் ஹிட்லர், சியாங் நிலைதான் ஆட்சியாளருக்கு ஏற்படுமென்று கூறினார்.

சாமி சிதம்பரனார்

அனைத்திந்தியக் குடியரசுக் கட்சி சார்பில் பேசிய தோழர் சாமி சிதம்பரனார் குறிப்பிட்டதாவது:—

இந்த ஆட்சி வரவர அநாகரிகமான முறையில் செல்லுகிறது. முன்பு வெள்ளைக்காரன் இந்த நாட்டில் என்னென்ன சாதனங்களைக்கொண்டு இந்நாட்டினரை அடக்கினானோ அதே சாதனங்களைக்கொண்டு இந்த அரசாங்கம் நம்மை ஆளத் தொடங்கிவிட்டது! அந்த மீறி நடக்கிறது. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்பதுபோல நாட்டைக் குட்டிச்சுவராக்கின்றனர். மதுவிலக்கு என்பது பேருக்குத்தானே யொழிய மது இன்னும் ஒழியவில்லை. மதுவிலக்கை ஒழுங்காக நடத்திச் செல்ல இவ்வரசாங்கத்திற்கு திறமையில்லை. நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால் கிடைக்கு எட்டாடு கேட்பது போல, காட்டுமிராண்டி ஆட்சி நடைபெறுகிறது. என்றார்.

அ. பொன்னம்பலனார்

தோழர் அ. பொன்னம்பலனார் பேசியதாவது:—

நான் ஓர் சுயமரியாதைக்காரன், பகுத்தறிவுவாதி. இந்த சர்க்காரின் போக்கை நான் ஒருபோதும் ஒத்துக்கொள்ள முடியாது. இந்த சர்க்கார் ஜனசர்க்காரா, அல்லது பணிதர்களை வேட்டையாடும் சர்க்காரா என்றுபுரியவில்லை. இங்கு வீடு கட்டினவனுக்குவீடில்லை பாடுபடுபவனுக்கு சோறில்லை. லஞ்சம், கள்ளமார்க்கட் கொள்ளை லாபத்திற்கு குறைவேயில்லை. உத்தமன் காந்தியின் பேராலே நிறுவப்பட்ட இந்தஆட்சியிலா இந்தக் கொடுமைகளெல்லாம் நடக்கவேண்டும். புத்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமானுஜர் போன்றோர் தோன்றியஇந்த நாட்டிலா இந்த அக்கிரமங்கள் நடப்பது? ஜாலியன்வாலாபாக்கிலே நடந்த அட்டூழியத்தைப் பற்றி ஆத்திரப் பட்டோமே. அன்னியன் செய்தான் அதை. இப்பொழுது நம்மவனே இப்படி சேலம் போன்ற படுகொலையைச் செய்வதென்றால் எப்படி சும்மாயிருக்க முடியும்? இதைக் கொலைகார ஆட்சி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுவது? ஆஸ்டிலே தண்டவாளத்தைப் பெயர்த்து, தந்திக் கம்பிகளை அறுத்து, தபாலாபீஸ்களைக் கொளுத்திய மகான்கள் இன்று 5 ஏக்கர் நிலத்தையும் வாங்கிக்கொண்டிருப்பதோடு நின்றுவிடக்கூடாதா? இது போன்று ஏன் அக்கிரமச் செயலைச் செய்ய வேண்டும்? சேலம் சிறையிலுள்ள கம்யூனிஸ்டுகளெல்லாம் 'கைதி'களாம். ஏன்? இன்று ஆட்சியிலுள்ளவர்களெல்லாம் கைதிகள் அல்லாமல் வேறு யார்? ஆஸ்டில் சிறையிலிருந்தவர்கள்தானே இவர்கள்.

இப்பொழுதெல்லாம் மந்திரிகள் போலீஸ் பாதுகாப்பு இல்லாமல் வெளிக்கிளம்ப முடிவதில்லை. ஏன் இந்த நிலை? சேலம் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதே என்றிருந்தால் நமக்கே மந்திரிமார்கள் போலீஸ் பாதுகாப்போடு பரந்த மைதானத்தில் மக்களை கூட்டி, "சேலத்திலே 22 பேரைச்சுட்டு வீழ்த்தியது நியாயமே'' என்று கூறிப் பார்க்கட்டும். அதே இடத்தில் அதே மக்களைக்கூட்டி, நாங்களும் பேசுகிறோம். சேலம் படுகொலை அநியாயம் என்று பிறகு வாக்கெடுத்துப் பார்க்கட்டும். அதில் அவர்கள் தோற்றுவிட்டால் தங்கள் மந்திரிப்பதவிகளை விட்டுவிட்டு வெளியேறுவார்களா? என்று பேசி முடித்தார்.

நாராயணன்

சென்னைத் தொழிற் சங்க சார்பில் தோழர் நாராயணன் பேசியதாவது.

சேலத்திலே நடந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமே அச்சிறையிலுள்ள ஜெயிலர் அய்யாப்பிள்ளை என்பவராகத்தான் இருக்க முடியும் அவர் கைதிகளிடம் மிக மிக கொடூரமாக நடப்பவர். முன்பு நான் சிறையில் இருந்தபோது வேலூரில் அவர் இருந்தார். 'சிறையிலே கொடூரமான மனிதன் யார் என்றால் எல்லாரும் கூறுவர் அய்யாபபிள்ளைதான் என்று.

இன்று இங்கு நடக்கும் கூட்டத்தைப் பற்றின விளம்பரத்தைச் சுவரில் ஒட்டுவதற்காகச் சென்ற தோழர்கள் சின்னப்பன், நாகலிங்கம் என்பவர்களைப் பிடித்து இரண்டு வாரங்கள் சிறைத் தண்டனை அளித்துள்ளனர் அரசாங்கத்தார். இதோ அருகிலிருக்கும் சிறையிலிருந்து அவர்கள் நம் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டுதானிருப்பார்கள். சாதாரண விளம்பரம் ஒட்டச் சென்ற நமது பாட்டாளித் தோழருக்கு இரண்டு வாரங்கள் சிறை என்றால், இன்னும் என்னென்ன நடக்க இருக்கிறது என்பதே தெரியவில்லை. எனவே நாம் அனைவரும் ஒத்து ஆட்சியாளரின் போக்கை எதிர்க்க வேண்டும் என்று பேசிமுடித்தார்.

இரா. நெடுஞ்செழியன்

பிறகு திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார். (பேச்சு பின்னர் வரும்)

என். ஜீவரத்தினம்

தோழர் என். ஜீவரத்தினம் எம். சி. பேசுகையில்:

ஆட்சியாளரின் யதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்தும், இந்த நாட்டில் ஜனநாயகம் கொலை செய்யப்படுகிறதென்றும், சேலம் துப்பாக்கிப் பிரயோகம் ஓர் காட்டுமிராண்டிச் செயல் என்றும் கண்டித்துப்பேசினார். பிறகு சேலம் துப்பாக்கித்துரைத்தனத்தைக் கண்டிக்கும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

(ந-சி)

தி. மு. கழகக் கூட்டங்கள்

1 - 3 - 50

ஆம்பள்ளி :— சி. பி. சிற்றரசு

2 - 3 - 50

திருக்கழுக்குன்றம் :— சி. பி. சிற்றரசு

கிராமத்தைக் காப்பாற்ற ரூ 1079000 செலவு

லண்டன், பிப். 27 —

ஸப்போக்கில் கேஸலி லாண்ட் என்கிற கிராமத்தைக் கடல் கொண்டுவிடாமல் தடுக்க வலுவான கடல் சுவர், கான்கிரீட் சுவரை 1500 அடி நீளம் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ரூ. 1079000 செலவாகுமாம்.

—ரூடர்.

★ நாட்டு நடப்பு ★

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்

உ. நா. காட்டாத்தூர் கிராமத்தில் 15-2-50ல் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது ஆசிரியர் தோழர் சி. ஏகாம்பரம் அவர்கள் (அம்பூர்) தலைமை வகித்து தன்னுடைய முன்னுரையில் தற்கால அரசியலில் தாழ்த்தப்பட்டோர் உரிமையும் ஆங்கிலேயரின் கடமையும் என்பதைப் பற்றி மக்களுக்கு விரிவாக எடுத்துப்பேசினர்.

பின் பொன் பாப்பி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஆர். இளைய பெருமாள் அவர்கள் உணர்ச்சிததும்ப முற்போக்கிலே உள்ள இக்காலத்தில் தாழ்த்தப்பட்டோர் எப்படி முன்னேற வேண்டுமென்பதையும், கல்வியும் நாகரீகமும்தான் அதற்கு வழி காட்டும் என்பதையும் தெளிவாக எடுத்துப்பேசினர். தொடர்ந்து பேசிய ஆசிரியர் கே. சொக்கநாதன் அவர்கள், மக்களுக்குள் உள்ள அடிமை மனப்பான்மையும், ஒற்றுமையின்மையும் ஒழிந்தால்தான் இக்கழகம் விரைவில் முன்னேற்றமடையும் என்றும், அடுத்த கூட்டத்தைச் சிறப்பாகவும் அறிஞர்களைக் கொண்டும், தலைவர்களைக்கொண்டும், நடத்தவேண்டும் என்றும் பேசி முடித்தார். பின் ஆசிரியர் சின்னப்பா நன்றிகூற கூட்டம் இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது. கூட்டத்திற்குப் பல ஊர்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழர் மறுமலர்ச்சி மன்றம்

பொ. னா. சி:—9-2-50 அன்று இரவு 9-30 மணி அளவில் இவ்வூர் பகுத்தறிவு வாசகசாலை கட்டிடத்தில் இருக்கும் தமிழர் மறுமலர்ச்சி மன்றக் கமிட்டிக் கூட்டம் தோழர் க. இளமாறன் தலைமையில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) பெரியார் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(2) சந்தா, நன்கொடை புத்தகம் அச்சடிக்கத் தீர்மானிக்கப்பட்டு, செயலாளருக்கு உரிமை தரப்பட்டது.

(3) மன்றத்தின் பொருட் காப்பாளரான மிராசு வியாபாரி பி. கே. விசுவநாதன் கொள்கைக்கு முரண்பாடாக நடப்பதால் கமிட்டி உறுப்பினர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, மன்றத்திலிருந்து நீக்கப்பட்டார். பிறகு செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

மருத்துவர் சங்கம்

அருப்புக்கோட்டை, பிப். 21—
21-2-50ல் அருப்புக்கோட்டை மருத்துவர் சங்கம் டாக்டர் ஜி. அரிநாதன் அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்வமயம் மதுரை நகர மருத்துவ தோழர்கள் முனிசிபல் லைசென்ஸ் விஷயமாக மேல் விருத்தம் செய்திருப்பதால் அவர்களுக்கு அனுதாப வேலைநிறுத்தமும், நஷ்ட நிவாரணத்திற்குப் பணமும், சென்னை மாகாண மந்திரிக்குத் தந்தியும் கொடுக்கப்பட்டு பல தோழர்களால் சொற்பொழிவாற்றப்பெற்று இனிது கூட்டம் முடிவுற்றது.

திருக்குறள் வகுப்பு

சங்கராபுரம், பிப். 22—
18-2-50ந் தேதி சனிக்கிழமை அன்று தி. மு. கழகக் கட்டிடத்தில், கலைப்பிரிவுக் கழகத்தின் சார்பில் வாராந்திர திருக்குறள் வகுப்பு இன்று தோழர் ப. கண்ணன் ஆசிரியராக இருந்து நடத்தினர். திருக்குறளின் உண்மைக் கருத்தை மறைத்து உரையெழுதிய பரிமேலழகன் பொய்மையையும், குழந்தையுரையையும் எடுத்துச் சொல்லி விரிவாக விளக்கிக் கூறி ஆசிரியர் வகுப்பை நடத்தினர்.

டாக்டர் சி. நடேசன் மன்றம்

சென்னை, பிப். 25—
டாக்டர் சி. நடேசன் மன்றத்தின் சார்பாக 21—2—50 அன்று மாலை 6-மணிக்கு டாக்டர் நடேச (முதலியார்) நினைவு நாள் கொண்டாடப்பட்டது. அதுசமயம் அக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் தலைமைவகித்து டாக்டர் நடேசனாரின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் தொண்டைப் பற்றியும் பேசினர். அடுத்து மன்றத்தலைவர் தோழர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. அவர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசிமுடித்தார்கள். அடுத்தபடியாக தி. மு. க. பிரசாரக் குழுச் செயலாளரான தோழர் இரா. செழியன் அவர்கள் டாக்டர் நடேசனார் திராவிடப் பெருங்குடி மக்களுக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் சேவைசெய்ததைப் பற்றியும், மற்ற டாக்டர்களைப்போல் அவர் நோயாளிகளிடமிருந்து பணம் பெறுமலேயே மருந்து உதவி செய்துவந்தார் என்பதைப் பற்றியும் விளக்கமாகச் சொற்பொழிவாற்றினர்கள். கடைசியாக முன்னாள் ஷெரீப் தோழர் ஷாபிமகமத் அவர்களும் அன்னாருடைய பொதுநலச் சேவையைக் குறித்து விவரமாகப் பேசி முடித்துக்கொண்டார்கள். அடுத்து செயலாளரால் தோழர் சரத்சந்திரபோஸ் அவர்களின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

இளைஞர் முன்னேற்றக் கழகம்

எட்டயபுரம், பிப். 22—
19—2—50ல் கி. முத்துவேல் அவர்கள் தலைமையில் டை கழக அங்கத்தினர்கள் கூட்டம் எட்டயபுரம் தண்ணீர்மடத்தில் நடந்தது. அப்போது ச. சண்முகவேல், எஸ். கே. சாமி, கலிங்கன், வி. சதாசிவம் ஆகியவர்கள் பேசிய பிறகு, கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரசியல்,பொருளாதார,சமுதாய விடுதலைக்கும், பகுத்தறிவு மணியும் கழகத்தின் கொள்கையாக இந்தக் கூட்டம் தீர்மானித்தது.

சேலம் சிறையில 11—2—50ல் பாதுகாப்பு கைதிகள் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. இம்மாதிரி சம்பவங்கள் இனி எந்த சிறையிலும் நடக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். கட்சி சார்பற்றதொரு ஜனப்பிரதிநிதிகளைக்கொண்டு பகிரங்க விசாரணை செய்ய வேண்டுமென்றும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு அளிக்க வேண்டுமென்றும், துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமான அதிகாரிகளை விசாரணை முடியும்வரை வேலையிலிருந்து விலக்கிவைக்க வேண்டுமென்றும் கடலூர் வேலூர் சிறைகளில் நடந்ததாய் கூறும் பிரயோகம் பற்றியும் விசாரணை செய்து நீதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

வானொலித் திறப்பு விழா

திருத்தங்கல், பிப். 26—
23—2—50 இரவு 8 மணிக்கு, இவ்வூர் கூட்டுறவு நாணய சங்கக் கட்டிடத்தில், சென்னை மாகாண கூட்டுறவு ஜாயிண்டு ரிஜிஸ்டரான தோழர் எ. பழனியப்பன் எம். ஏ. அவர்கள் வானொலியைத் திறந்து வைத்து, வானொலியின் அவசியத்தை விளக்கிப் பேசினர்.

அவ்வமயம் இராமநாதபுரம் ஜில்லா டெவலெப்மெண்ட் ஆபீசர் அக்னீசுவரன், டை உதவி ஆபீசர் ஜில்லா கூட்டுறவு ரிஜிஸ்டரான கஜேந்திரன், டை செண்டரல் பேங்க் காரியதரிசி பாலகுருசாமி மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

தோழர் கே. எஸ். சீனிவாசன் தலைவர்களை வரவேற்றுப் பேசினர். இரவு 9-மணிக்குத் தோழர் ஆர். பழனியப்பன் எம். ஏ. அவர்கள் தலைமையில் சாத்தூர் ஏ. வி. நடுநிலைப்பள்ளி மாணவர்களின் "சுதந்திர உதயம்" எனும் வில்லுப்பாட்டு சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் (3000) மூவாயிரத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் வந்திருந்தனர்.

தோழர் பாலகுருசாமி நன்றி கூற விழா 11 மணிக்கு இனிது முடிந்தது. (ந. கி.)

நகைச்சுவையரசு கழகம்

மேலச்சண்முகபுரம், தூத்துக்குடி, பிப். 21—
இவ்வூர் நகைச்சுவையரசு என். எஸ். கே நடிகர் கழகத் திறப்பு விழா 19-2-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் டை நடிகர் கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தோழர் இராசு தங்கம் அவர்கள் வாலிபர்கள் கடமை என்பது பற்றிப் பேசினர். கூட்டத்திற்கு சுமார் 1000 பேர்வரை பொது மக்கள் குழுமியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பின் தலைவர் முடிவுரையுடன் செயலாளர் மாசிலாமணி நன்றிகூற கூட்டம் 7-30 மணிக்கு இனிது முடிந்தது.

திருவள்ளுவர் மன்றம்

வளவனூர், பிப். 24—
இம் மன்றச் சார்பில் 18, 19, 20—2—50 ஆகிய நாட்களில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது.

முதல் நாள் (18-2-50) அன்று உயர்திரு தோழர் ஆர். பி. பூவராகசாமிப் பிள்ளை (இவ்வூர்பஞ்சாயத்து போர்டு தலைவர்) அவர்கள் தலைமையில் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் 'வள்ளுவர் வகுத்த வழி' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் புலவர் தோழர் மு. சுந்தரமூர்த்தி அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

இரண்டாம் நாள் (19—2—50) அன்று தோழர் வி. சபாபதி அவர்கள் தலைமையில் அட்கவி வேலாயுதம் பிள்ளை (தமிழாசிரியர் விழுப்புரம்) அவர்களும், எஸ். இராமலிங்கம் பிள்ளை (தமிழாசிரியர் பரங்கிப்பேட்டை அவர்களும் "வள்ளுவர் வாய்மை" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் புலவர் கனக சபை அவர்கள் நன்றிகூறிய பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

மூன்றாம் நாள் (20—2—50 அன்று தோழர் ஆர். முனிசாமிப் பிள்ளை (இராசவிலாச) அவர்கள் தலைமையில் வித்துவான் ந. ஆறுமுக முதலியார் (தமிழாசிரியர் விழுப்புரம்) அவர்கள் 'வள்ளுவரும் காந்தியும்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

அதன்பின் இரவு 7 மணிக்கு சிக்கல் அபூர்வ வேணுகான பாலகிருஷ்ணன் அவதார், பேபி நீலா (புல்லாங்குழல்), அவர்களது குழுவினரால் குழலிசை அரங்கும், 9 30 மணிக்கு சிதம்பரம் ஆர். நாராயணசாமி அவர்களது குழுவினரால் இன்னிசை அரங்கும் நடைபெற்றது. அதன்பின் புலவர் மு. சுந்தரமூர்த்தி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

அக்குழுவினரின் விவரம்

சிக்கல் அபூர்வ வேணுகான பாலகிருஷ்ண அவதார் பேபிநீலா புல்லாங்குழல்; குடந்தை சசிதரன் வயலின்; சிக்கல் எ. எஸ். நடேசஐயர் மிருதங்கம்; சிக்கல் ஆர். வடிவேல் டோலக்; சிதம்பரம் ஆர். நாராயணசாமி வாய்ப்பாட்டு; குடந்தை சசிதரன் வயலின்; புதுவை இராமமூர்த்தி ஐயர் மிருதங்கம்; எஸ். நாதன் கடம்.

தென் ஆற்காடு மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு
12—3—50 ஞாயிறன்று குறிஞ்சிப்பாடியில் "திருவள்ளுவர் பந்தலில்" நடைபெறும்

தலைவர் :— இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
துவக்குபவர் :— பூ. கணேசன் எம். ஏ.

சொற்பொழிவாளர்கள் :—
சி. என். அண்ணாத்துரை எம்.ஏ., க. அன்பழகன் எம்.ஏ., சேலம். ஏ. சித்தையன், இரெ. இளம்வழுதி எம். ஏ., ஈ. வெ. கி. சம்பத், என்.வி. நடராசன், டி. கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல் மற்றும்பல இயக்கச் சொற்பொழிவாளரும் கலந்துகொள்வர்.

இரவு சி. என். ஏ. குழுவினரால் நடத்தப்படும்
"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

கட்டணம் :—

நன்கொடையாளர்	... ரூ.	5—0—0	(உணவுடன்)
வரவேற்பாளர்	...	"	(உணவுடன்)
சார்பாளர்	... ரூ.	2—0—0	(உணவுடன்)
பெண் சார்பாளர்	... ரூ.	1—0—0	(உணவுடன்)
சார்பாளர்	... ரூ.	1—0—0	(உணவின்றி)
பார்வையாளர்	... ரூ.	0—8—0	(உணவின்றி)

பெண்களுக்குப் பார்வைக் கட்டணம் கிடையாது

குறிப்பு :—குறிஞ்சிப்பாடி, கடலூர்—விருத்தாசலம் இரயில் மார்க்கத்தில் உள்ளது.

வரவேற்புக் குழுவினர், குறிஞ்சிப்பாடி

இனி நடப்பவை

வில்லிவாக்கம்:- இவ்வூர் தி. மு. க. சார்பில், 2—3—50 வியாழன்று மாலை 7 மணியளவில், ஒற்றைவாடைத் தெரு, 12-எண்ணுள்ள இடத்தில் ஓர் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிரிவு நல்வாழ்த்து

சென்ற 25—2—50 அன்று சென்னை எழும்பூர் தலைமை பார்சல் குமஸ்தா தோழர் எல். வில்வநாதம்பிள்ளை கடந்த 30 ஆண்டுகள் ரயில்வேயில் சிறப்பாக வேலை செய்துவிட்டு ஓய்வு பெற்றுக் கொண்டார். அதைப் பாராட்ட பார்சல் குமஸ்தாக்கள் ஒரு பிரிவு நல்வாழ்த்துக் கூட்டம் நடத்தினர். அச்சமயம் பலர் அன்னாருடைய குணப் பண்புகளையும் விடாமுயற்சியையும், உழைப்பையும் பாராட்டிப் பேசினர். அன்னார் தக்கபடி பதில் அளித்தார். பார்சல் குமஸ்தாக்கள் அன்னாருக்கு ஒரு பிரிவுவிடை மடல் படித்து அளித்தனர். அன்னார் ஒரு சிறந்த தமிழர். சிற்றுண்டிக்குப்பிறகு கூட்டம் இனிது கலைந்தது.

வாய்ப் பூட்டு!

சென்னை, பிப். 25—
தேசத் துரோகமாகப் பேசியதாக சக்கார்துஞ்சினியிம் தொழிற்சாலையைச் சேர்ந்த பி. தாமோதரம் என்பவர் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். ஸ்டாலின்பிறந்த தின சம்பந்தமாக சென்ற டிசம்பர் மாதம் இவர் நிகழ்த்திய பிரசங்கத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

வோட்டுப் பெட்டியில் ஒரு பவுன் நோட்டு!

லண்டன், பிப். 27—
பிரிட்டிஷ் தேர்தலில் ஷேயர் தொகுதிப் பெட்டியில் வோட்டுக் காகிதங்களுடன் ஒரு பவுன் நோட்டும் காணப்பட்டனவாம். இதைப் போட்டவர் 6 மாத காலத்திற்குள் இதைக் கேட்டால் அவரிடம் கொடுக்கப்படும்; இல்லையேல் இப் பெட்டியின் வோட்டை எண்ணியவருக்கு இந்த நோட்டு கொடுக்கப்படுமாம். (ருனோப்)

'டூரிஸ்ட் இயக்கம்'

இந்தியர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு

சென்னை பிப். 27—
உலகிலுள்ள முக்கிய நகரங்களில் உல்லாசப்பிரயாணம்செய்து அங்குள்ள முக்கிய இடங்களைக் கண்டு களிப்பதுடன் சிலாட்கள் தங்குவதற்கு வசதி செய்வது அந்த இடங்களைப்பற்றிய தகவல்கள் அளிப்பது எம்முறையில் பிரசாரம் செய்வது என்பன போன்றவற்றைக் கற்றுக்கொடுப்பதற்கு இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் நம் நாட்டிலிருந்து சில இந்தியர்களை அனுப்புவதற்கு சாமஸ் குக் அண்டு கம்பெனி யோசித்துள்ளதாகத் தெரிகிறது. சுமார் 86 ஆண்டுகளாக இவ்வேலையை இக்கம்பெனி செய்து வருகிறது.

சமீபகாலத்தில் சில இந்தியர்களுக்கு இக்கம்பெனி இப்பயிற்சி அளித்தது. அதில் ஒருவரை மைசூர் வட்டாரங்களில் இருக்கும் இடங்களின் முக்கியமான ஏற்றத்தைப் பிரசாரம் செய்வதற்காக ஒரு மினி ஆபீஸ் மைசூர் கூடிய சீக்கிரம் திறக்கப்படும். —ருனோப்

தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக மாநாடு அறிவிப்பு

வருகிற 12—3—50ல் நடக்கவிருக்கும், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக மாநாட்டிற்குத் தீர்மானம் அனுப்பும் தோழர்கள், 7—3—50க்குள் தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

வரவேற்புக்குழுவினர்
தெ. ஆ. தி. மு. க. மாநாடு
குறிஞ்சிப்பாடி

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1